**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.</u>**

**முன்னிலை:— திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 24ம் நாள்

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ம் நாள் செவ்வாய் கிழமை

**<u>மேல்முறையீட்டு வழக்கு எண்.8/2024</u>**

**<u>CNR No.TNTV-14-000053-2024</u>**

1. முருகையன்

2. கோபாலகிருஷ்ணன்

3. அமுதவள்ளி

4. கல்யாணசுந்தரம்

5. ஜெயலெட்சுமி

. . . . . மேல்முறையீட்டாளர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள்

எதிராக

1) கௌரி

2) தாமரைச்செல்வி

3) தேவராஜ் . . . . . . எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்

4) ராணி

5) தனசேகரன்

6) அனுராதா . . . . . . எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீடானது திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.57/2013–ல் கடந்த 28.03.2017–ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>விசாரணை நீதிமன்ற தரப்பினர்கள்</u>:

1) கௌரி

2) தாமரைச்செல்வி

3) தேவராஜ் ...... வாதிகள்

எதிராக

1. முருகையன்

2. கோபாலகிருஷ்ணன்

3. அமுதவள்ளி

4. கல்யாணசுந்தரம்

5. ஜெயலெட்சுமி

6. ராணி

7. தனசேகரன்

8. அனுராதா ..... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடு இந்நீதிமன்றத்தின் முன்பு 06.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மேல்முறையீட்டாளர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.புலமை வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல்., மற்றும் திரு.மூர்த்தி, பி.ஏ., பி.எல்., ஆகியோர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வ.அரசு, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தோன்றா தரப்பினர்களாகப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்து இம்மேல்முறையீட்டில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.......

**<u>தீர்ப்புரை</u>**

மேல்முறையீட்டை அனுமதிக்க கோரியும், திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.57/2013–ல் கடந்த 28.03.2017–ம் ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கரவு செய்து மேல்முறையீட்டை அனுமதிக்க கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் இம்மேல்முறையீடு தாக்கல்.

**2) <u>விசாரணை நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்</u>:**

வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் இறந்த ராமச்சந்திரன் அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள் என்றும், 1–ம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தகப்பனாருமான ராமச்சந்திரன் அவர்களின் முதல் மனைவி காளிமுத்து அவர்கள் மூலம் பிறந்தவர்கள் தான் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆவார்கள் என்றும், ராமச்சந்திரன் அவர்கள் அவரது முதல் மனைவி காலமான பிறகு சாவித்திரி என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு அவர் மூலம் பிறந்தவர்கள் தான் 5 முதல் 8 பிரதிவாதிகள் ஆவார்கள் என்றும், இவர்களுடன் பிறந்த தனபாலன், ரோஜாமணி ஆகியோர்கள் திருமணம் ஆகாமலேயே காலமாகிவிட்டனர் என்றும், ராமச்சந்திரன் அவர்கள் தனது 2வது மனைவி இறந்த பிறகு 1வது வாதியை திருமணம் செய்து கொண்டு அவர்கள் மூலம் பிறந்தவர்கள்தான் 2, 3 வாதிகள் ஆவார்கள் என்றும், இந்த உறவுமுறையை காட்டக்கூடிய வம்சாவழி பட்டியல் இந்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்கள் என்பது காலஞ்சென்ற ராமச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான சொத்துக்களாகும் என கூறியுள்ளார்.

ii) இதில் தாவா 'அ' அட்டவணை சொத்துக்கள் என்பது ராமச்சந்திரன் அவர்களால் 28.02.1958ம் தேதியிட்ட கிரய சாசனத்தின் மூலமும், 08.03.1958ம்

தேதியிட்ட கிரய சாசனத்தின் மூலமும், கிரயம் பெறப்பட்ட சொத்துக்களில் ராமச்சந்திரன் அவர்களால் 1வது வாதிக்கும், 2, 4 பிரதிவாதிகளுக்கும் 30.11.1982 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலம் கொடுக்கப்பட்ட மற்றும் 04.08.1987ம் தேதியில் கிரய சாசனத்தின் மூலம் விஜயலெட்சுமி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்கள் போக மீதமுள்ள சொத்துக்களாகும் என்றும் கூறியுள்ளார்.

iii. தாவா ஆ அட்டவணை சொத்து என்பது ராமசந்திரன் அவர்களுக்கு சொந்தமான குடியிருப்பு மனை மற்றும் வீடாகும் என்றும், தாவா சொத்துக்களை ராமச்சந்திரன் அவர்கள் உயிருடன் இருக்கும் வரை தன் வசம் வைத்து அனுபவம் செய்து வந்தார் என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து ராமச்சந்திரன் அவர்கள் எந்தவித ஏற்பாடுகளும் செய்து வைக்காத நிலையில் துர்திருஷ்டவசமாக கடந்த 28.10.1997ம் தேதியில் விபத்தில் காலமாகிவிட்டார் என்றும், காலஞ்சென்ற ராமச்சந்திரன் அவர்களுக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் சட்டப்படியான வாரிசுகள் என்பதால் இந்த வகையில் ராமச்சந்திரன் அவர்களால் விட்டு செல்லப்பட்ட தாவா சொத்துக்களை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் சமமாக அடைந்து கொள்ள உரிமை படைத்தவர்கள் ஆவார்கள் என்றும், தாவா சொத்துக்கள் என்பது ராமச்சந்திரன் காலமான பிறகு பிரிவினை செய்யப்படாமல் பொதுவில் இருந்துவருகிறது என்றும், தாவா சொத்துக்கள் பொதுவில் பிரிவினை செய்யப்படாமல் இருந்து வந்ததால் அது வாதிகளுக்கு பயன் அளிக்காது என்பதால் வாதிகள், பிரதிவாதிகள் அனைவரிடமும் தாவா சொத்துக்களை முறையாக பிரிவினை செய்துகொள்ளலாம் என்று தெரிவித்தும் அதற்கான நடவடிக்கைகளை பிரதிவாதிகள் எடுக்கவில்லை என்னும், இந்த சூழ்நிலையில் தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதற்காக வாதிகள் வழக்கு தாக்கல் செய்ய

நடவடிக்கை எடுத்து வந்ததை தெரிந்து கொண்ட 3-ம் பிரதிவாதி முற்றிலும் தவறான சங்கதிகளை சொல்லி வாதிகளுக்கு 13.03.2013 தேதியிட்டு கையெழுத்து செய்து 13.04.2013ம் தேதியில் ஒரு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றும், இந்த அறிவிப்பிற்கு வாதிகளால் 18.05.2013ம் தேதியிட்டு ஒரு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும், தான் சொத்துக்கள் என்பது பிரிவினை ஆகாமல் பொதுவில் இருந்து வரும் நிலையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் கூட்டுரிமையாளர்கள் மற்றும் கூட்டு அனுபவதாரர்கள் என்ற அடிப்படையில் வரக்கூடியவர்கள் ஆவார்கள் என்றும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 3/11 பாகவீத உரிமை உள்ளது என்றும், அதேபோல் பிரதிவாதிகளுக்கும் தலா 1/11 பாகவீதம் உரிமையுள்ளது என்றும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்குள்ள 3/11 பாக வீதத்தை பொதுவில் பாகப்பிரிவினை செய்ய இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது.

3) <u>விசாரணை நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:

தான் இந்த வழக்கின் 2-வது பிரதிவாதி என்றும், வாதிகளால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 1, 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தானே சேர்த்து இந்த எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த தாவாவில் 1 முதல் 5 பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டது போக இதரவற்றை வாதிகள் கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டுள்ளனர் என்றும், எம்.எஸ்.ராமசந்திர முதலியாரின் வாரிசுகள் சம்பந்தமாக வழக்குரை 1 & 2-வது பத்தி வழக்குரை விபரங்கள் முற்றிலும் தவறானது என்றும், அதுபோல் 2, 3 வாதிகள் 2வது தாரத்தின் மகள் மற்றும் மகன் என்று கூறியிருப்பது சரியல்ல என்றும், அதுபோல தனசேகரன் ஒருவன் மட்டுமே முதல் மனைவியின் வாரிசு என்று வாரிசு சர்டிபிகேட் வாங்கியிருப்பதும்

மோசடியானது என்றும், கும்பகோணம் களம் வட்டாட்சியரிடம் நி.மு 16262/1997, 23.12.1997–ல் வாங்கியுள்ள வாரிசு சர்டிபிகேட் உண்மையை மறைத்து பொய்யாக வாங்கப்பட்டுள்ளது என்றும், இது வாதிகள் கனம் கும்பகோணம் வட்டாட்சியரிடம் மோசடி தகவல் கொடுத்து வாங்கியுள்ளார்கள் என்றும், அந்த மோசடியோடு நிற்காமல் 28.10.1997–ல் எம்.எஸ்.ராமசந்திர முதலியார் சாலை விபத்தில் இறந்தவுடன் வாதிகள், 7–ம் பிரதிவாதி தனசேகரனும் வாகன விபத்து வழக்கில் ஏழு லட்ச ரூபாய் நஷ்ட ஈடு வாங்கி அடைந்திருக்கிறார்கள் என்றும், வாதிகள் மற்றும் 1 முதல் 6 மற்றும் 8 ஆகிய பிரதிவாதிகளுக்கு அந்த தொகையில் விகிதாச்சார முறைப்படி கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடு தொகையை கொடுத்த பிறகே இந்த பொய்யான பாக வழக்கு தொடர்வதற்கான தகுதியுடையவர்கள் ஆவார்கள் என்றும் கூறியுள்ளார்.

ii) அந்த தொகைக்கு இந்த வழக்கில் சொத்தில் எக்காரணத்தை கொண்டாவது நீதிமன்றத்தார் வாதிகளுக்கு பாகப்பிரிவினை விகிதாச்சாரம் வழக்கில் கேட்டுள்ளபடி கிடைக்கும் என்று கருதும் பட்சத்தில் அந்த பாகத்தில் வாதிகளின் பாகத்தில் 1 முதல் 5 மற்றும் 8–ம் பிரதிவாதிகளுக்கு சார்ஜ்பாத்தியம் கிடைக்க உத்தரவிட வேண்டியதாய் இருக்கின்றது என்றும், ஒரு ஆணும்,பெண்ணும் சேர்ந்து வாழ்ந்தாலே அது இந்திய சாட்சி சட்டம்பிரிவு 50–ன் படி கணவன், மனைவி என்று கருதப்படுவார்கள் என்றும், ஆனால் இந்த வழக்கில் வாதிகள் ஒப்புக்கொண்டுள்ளபடி ராமசந்திர முதலியாருக்கு முதல் மனைலி காளிமுத்து அம்மாள், இரண்டாவது மனைவி சாவித்திரி அம்மாள் என்றும், அதன் பிறகு இந்த 1வது வாதியை ராமசந்திர முதலியார் சேர்த்துக் கொண்டுள்ளார் என்றும், அவருடைய திருமணம் என்பது கேள்விக்குறியான ஒன்றாகும் என்றும், அப்படியிருக்கும் சூழ்நிலையில் மேற்படி உண்மைகளை மறைத்து 1–வது வாதி தன்னை காலஞ்சென்ற ராமசந்திர முதலியாரின்

இரண்டாவது மனைவி என்று பொய் சொல்லி வாகன விபத்தில் இறந்து போன ராமசந்திர முதலியாரின் இறப்புக்கு நஷ்ட ஈடாக 7 இலட்ச ரூபாய் பெற்றுக் கொண்டு அதற்கு தன்னை ராமசந்திர முதலியாரின் இரண்டாவது மனைவி என்று மோசடியாக நஷ்டஈடு பெற்றிருப்பது பெருத்த மோசடி செயலாகும் என்றும், அதையும் பெற்றுக்கொண்டு விட்டு இப்போது தான் 3வது மனைவி என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகள் 1–வது தாரத்தின் மகன்கள், மகள்கள் என்றும், சாவித்திரி அம்மாளுக்கு 8–வது பிரதிவாதி மட்டும் வாரிசு என்று தகவல் கூறியுள்ளார் என்றும், ஒரு பெண்ணானவர் மோசடியாக வழக்கு போடுவதற்காக தன்னை விருப்பம்போல பல மோசடியான செயல்களை செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

iii) இந்த வழக்கானது சட்டப்படி ராமசந்திர முதலியார் 3–வது மனைவி சேர்த்துக் கொள்ளும் காலத்தில் அவருக்கு 70 வயதிற்கு மேல் இருக்கும் என்றும், இந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு குழந்தைகள் உற்பத்தி செய்வதற்கான தகுதியுடையவரா என்பது கேள்விக்குறியானது என்றும், 1–ம் வாதியின் மயக்கும் பேச்சிலும், மாயவலையிலும் ராமசந்திர முதலியார் ஏமாந்து விழுந்து விட்டார் என்றும், 1–ம் வாதி ராமசந்திர முதலியாருக்கு மனைவி என்பது மோசடி என்றும், 2, 3 வாதிகளும் 1ம் வாதியின் கள்ளப்புருஷனுக்கு தான் பிறந்திருக்க வேண்டும் என்றும், உண்மையான திருமண தாம்பத்தியத்தில் 1ம் வாதிக்கு ராமசந்திர முதலியார் மூலம் பிறந்தவர்களா என்பது கேள்விக்குறியான ஒன்றாகும் என்றும், அந்த வகையில் 2, 3 வாதிகள் ராமசந்திர முதலியாருக்கு தான் பிறந்தார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது என்றும், இந்த தகவல்களெல்லாம் உண்மை நிலவரம் வெளிப்பட்டுவிடும் என்பதற்காக 1வது வாதி வழக்கை போட்டுவிட்டு நீதிமன்றத்திற்கு வராமல், உண்மை தகவல் ஏதும் தெரியாத 3–வது வாதியை சாட்சி சொல்ல அனுப்பியிருப்பது அபத்தமான செயலாகும்.

iv) மேலும் 30.11.1992–ல் காலஞ்சென்ற ராமசந்திர முதலியார் எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரம் 1–ம் வாதிக்கு ஜீவனாம்ச பாத்தியத்திற்கு மட்டுமே உரியது என்றும், 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு அந்த சொத்தில் பாகபாத்திய உரிமை உடையவர்கள் ஆவார்கள் என்றும், உண்மையில் ராமசந்திர முதலியார் தனது கடைசி காலத்தில் 2–ம் பிரதிவாதியாகிய தன்னுடைய பாதுகாப்பிலும், சவரட்சணையிலும் இருந்துள்ளார் என்றும், கடைசி கால கட்டத்தில் 1–ம் வாதியுடன் சுந்தரப்பெருமாள் கோலில் கிராமத்திற்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்றும், அங்கு போய் விட்டு வந்த பிறகு ராமசந்திர முதலியார் ஏற்கனவே 2–ம் பிரதிவாதியிடம் பெற்றுக் கொண்டுள்ள ரூ.55,000/–போக மேற்கொண்டு ரூ20,000 ஆக கூடுதல் ரூ.75,000/– பெற்றுக் கொண்டு 2–ம் பிரதிவாதி வசித்து வரும் வீட்டிற்கு ஒரு கிரய ரசீது லெட்டர் எழுதிக் கொடுத்துவிட்டு அந்த வீட்டையும், மேற்படி தொகைக்காக 2ம் பிரதிவாதியாகிய தனக்கு வீடு மனையை எழுதிக் கொடுத்துவிட்டார் என்றும், அந்த வகையில் 2–ம் பிரதிவாதியாகிய தான் வசித்து வரும் வீடு மனையானது விளக்குடி கிராமத்தில் தனக்கு சொந்தமாகி விட்டது என்றும், அதற்கான ராமசந்திர முதலியார் எழுதிக் கொடுத்த கிரய ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த வகையில் விளக்குடி கிராமத்தில் உள்ள வீடுமனையானது 2ம் பிரதிவாதியாகிய தனக்கு சொந்தமும், உரிமையும் ஏற்பட்டு விட்டது என்றும், அதற்கு பாகப்பிரிவினை கோரியிருப்பது சரியல்ல என்றும், 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதி ஆகியவர்கள் இராயநல்லூர் கிராமத்தில் உள்ள சொத்தின் உரிமையை 2ம் பிரதிவாதிக்கு தலா ரூ.50,000/– பெற்றுக் கொண்டு 25.09.2013–ல் ஒரு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்து அது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த சொத்திலும் வாதிகளுக்கு உரிமையில்லை என்றும், 1, 3, 4 பிரதிவாதிகளுக்கும் உரிமையில்லை என்றும், 2–ம் பிரதிவாதியிடம் 14.05.2002–ல் 1வது வாதி

ரூ.65,000/- ரொக்கம் பெற்றுக்கொண்டு இராயநல்லூர் நஞ்சை நிலத்திற்கான அக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், அந்த அக்ரிமெண்ட் காலாவதி என்ற குறைபாட்டினால் பாதிக்கப்படவில்லை என்றும், உச்சநீதிமன்ற தீர்ப்பு 2008 (1) சி.டி.சி 530-வது பக்கப் படி காலாவதியாகவில்லை என்றும், 1வது வாதியானவர் அந்த அக்ரிமெண்ட்படி அந்த சொத்தை 2-ம் பிரதிவாதியாகிய தனக்கு கிரய சாசனம் செய்து கொடுக்க கடமைப்பட்டவராவார் என்றும், சட்டப்படியான அந்த பரிகாரத்திலிருந்து 1வது வாதியானவர் தப்பிக்க முடியாது என்றும், இராயநல்லூர், விளக்குடி ஆகிய கிராமங்களுக்கு 1, 3 மற்றும் 4-வது பிரதிவாதிகள் 29.05.2013-ல் எழுதிக் கொடுத்துள்ள விடுதலைப் பத்திரப்படி இந்த சொத்துக்கள் 2ம் பிரதிவாதியாகிய தனக்கு பாத்தியமும், உரிமையும் ஏற்பட்டுவிட்டது என்றும், 03.05.1995-காலஞ்சென்ற ராமசந்திர முதலியார் எழுதிக் கொடுத்த கிரய ரசீது படி விளக்குடி வீடு, மனை 2ம் பிரதிவாதியாகிய தனக்கு பாத்தியமும், உரிமையும் ஏற்பட்டு தான் வீட்டு வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறேன் என்றும், அதில் வாதிகள் பாகம் கேட்க உரிமை இல்லை என்றும், எம்.எஸ்.ராமசந்திர முதலியார் வாகன விபத்தில் 1997-ம் ஆண்டு இறக்கும் போது 3ம் வாதிக்கு சுமார் 10 வயது இருக்கும் என்றும், அவர் உடல் நலமில்லாமல் காய்ச்சலால் எழுந்து நடமாட முடியவில்லை என்றும், ராமசந்திர முதலியாருக்கு ஈமக்கிரியைகள் மற்றும் கருமாதி இவைகளை தானே செய்துள்ளதாகவும், எம்.எஸ்.ராமசந்திர முதலியார் இறந்த போது 3ம் வாதி உடல் நலமில்லாமல் இருந்தார் என்பதை 3ம் வாதி அவருடைய வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், நேரத்துக்கு நேரம் மாறுவது 1ம் வாதியின் கடந்த கால நடவடிக்கைகள் மூலம் தெளிவாக தெரிய வருவதாகவும், இவ்வழக்கில் நீதிமன்ற கட்டணச்சட்டப் பிரிவு 37 (2) (1) பிரிவுகள் படி வாதிகள் கூட்டு அனுபவத்தில் உள்ளதாகவும், வழக்கு தாக்கல் செய்திருப்பது நிலை நிற்க மாட்டாது என்றும், இவ்வழக்கானது பிரிவு 37 (1)படி வழக்கை கால நிர்ணயப்படி

பொறுமானம் கேட்டு தாக்கல் செய்யாமல் நீதிமன்ற கட்டணம் செலுத்துவதை ஏமாற்றுவதற்காக கூட்டு அனுபவம் என்று அதற்கான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியிருப்பதால் வழக்கு நிலை நிற்கமாட்டாது என்றும், இவ்வழக்கை நீதிமன்ற சட்டப்பிரிவு 7(2) & நீதிமன்ற கட்டணச்சட்டம் 7 (2) (g) பிரிவுகள்படி கணக்குபோட்டு வழக்கு போட்டிருக்க வேண்டும் என்றும், வாதிகள் ராமசந்திர முதலியார் இறந்து போனதற்கு விபத்து நஷ்ட ஈடு போடுவதற்கு அவர்களை வாரிசுகள் என்று காட்டிவிட்டு இப்போது பாக வழக்கை நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காக கூட்டு அனுபவம் என்று கூறியிருப்பது வெட்ட வெளிச்சமாக கூட்டு அனுபவம் இல்லை என்று நீதிமன்றத்திற்கு தெரியக்கூடிய உண்மை என்றும், எனவே இந்த வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட பிரதிவாதிகள் பணிந்து பிரார்த்திக்கின்றனர்.

**4) <u>விசாரணை நீதிமன்றத்தில் வனையப்பட்ட எழுவினாக்கள்</u>:**

| | |
|---|---|
| 1. | தாவா சொத்துக்களில் வாதிகள் கூட்டுரிமையாளர்கள் இல்லையா ? |
| 2. | தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 3/11 பாகவீதம் உரிமை உள்ளதா ? |
| 3. | வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்னென்ன ? |

**5) <u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:**

அசல் வழக்கில் தேவராஜ் – **வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டும், **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12** வரை சான்றாவனங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் கோபாலகிருஷ்ணன் – **பி.சா.1** ஆகவும், சண்முகவேல் **பி.சா.2** ஆகவும், சிங்காரவேல் **பி.சா.3**ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் **பி.சா.ஆ.1** முதல் **பி.சா.ஆ.7** வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) <u>**விசாரணை நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்வு**</u>:

வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 3/11 பாகவீதம் உரிமை உள்ளது என்று விளம்புகை செய்தும், ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், நீதிமன்றத்தால் அனுசரிக்கப்படும் முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து ஒரு வழக்கறிஞர்/ஆணையரை நியமனம் செய்து அதன் மூலம் வாதிகளுக்கு உள்ள பாகவீதத்தை நளஇளப்பம் சரிகட்டி பாகப்பிரிவினை செய்து கொடுத்து இதன்படி ஒரு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தாவா சொத்துக்களில் 3/11 பாகவீதம் உரிமை உள்ளது என முதல் நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**7) <u>மேல்முறையீட்டிற்கான காரணங்களின் சுருக்கம்</u>:**

திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.57/2013 என்ற வழக்கு பாகப்பிரிவினை கோரி 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டு அந்த வழகானது கடந்த 28.03.2017 அன்று அனுமதிக்கப்பட்டதை ரத்து செய்ய வேண்டி இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்படுகிறது என்றும், கீழமை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்கள் 1 முதல் 5 பிரதிவாதிகளாகவும், 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள் வாதிகளாகவும், 4 முதல் 6 எதிர்மேல்முறையீட்டாளர்கள் 6 முதல் 8 பிரதிவாதிகளாகவும் கீழமை நீதிமன்ற வழக்கில் இருத்துள்ளார்கள் என்றும், கீழமை நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவானது சட்டப்படியும், சங்கதிகள்படியும் அறவே நிலைநிற்ககூடியதல்ல என்றும், ரத்து செய்யப்பட வேண்டியதாக உள்ளது.

ii) கீழமை நீதிமன்ற தாவா சொத்துக்கள் 2ம் மேல்முறையீட்டாளருக்கு ஆவணங்கள் மூலமாக கிடைக்கப்பெற்றுள்ளதையும், சொத்தின் அனுபவம் 2ம் மேல்முறையீட்டாளர் வசம் உள்ளதையும் கீழமை நீதிமன்றம் கருத்தில்

கொள்ளாமல் பிறப்பித்துள்ள உத்தரவு ரத்து செய்யப்படவேண்டியதாக உள்ளது என்றும், இறந்துபோன ராமச்சந்திரன் என்பவருக்கு கும்பகோணம் சுந்தரபெருமாள் கோயிலில் உள்ள சொத்தினை சேர்க்காமல் விடுபட்டுள்ளதையும், பகுதி பாகப்பிரிவினை கோரமுடியாது என்பதையும் கீழமை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறிவிட்டது.

iii) இறந்துபோன ராமச்சந்திரன் விபத்தில் இறந்துபோனதால் அதற்குறிய நஷ்ட ஈட்டு தொகையினை மோசடியாக நீதிமன்றத்தினை ஏமாற்றி 1, 2, 3 மற்றும் 5 எதிர்மேல்முறையீட்டாளர்கள் மட்டும் உண்மையான வாரிசுகளை விடுத்து மோசடி ஆவணங்கள் மூலம் நஷ்ட ஈட்டு தொகை பெற்று பிரிக்கப்பட்டுள்ள விவரம் கீழமை நீதிமன்றத்திற்கு தெரிந்தும் அந்த தொகையும் பாகப்பிரிவினைக்கு உட்பட்டது தான் என்பதை கருத்தில் கொள்ளாமல் அந்த தொகையினையும், இதர சொத்துக்களையும் விடுத்து பிறப்பித்துள்ள உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டியதாக உள்ளது.

iv) ராமச்சந்திரன் மற்றும் 1வது எதிர்மேல்முறையீட்டாளர் ஆகியோர்கள் 2ம் மேல்முறையீட்டாளரிடம் தொகையினை பெற்றுக்கொண்டுவிட்டபடியால் தாவா சொத்தில் எந்தவித பாகவீதமும் எதிர்மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் கீழமை நீதிமன்றத்தில் ஒட்டுமொத்தமாக வழக்கினை நடத்தியுள்ள விபரத்தினையும், எதிர்மேல்முறையீட்டாளர் வசம் எந்தவித அனுபவமும் இல்லை என்ற விபரத்தினையும், தவறான வழக்குமூலம் என்பதையும், தவறான மதிப்பீட்டு விவரம் என்பதையும் கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் வசம் எந்தவித அனுபவமும் இல்லாத

நிலையில் மதிப்பீட்டினை குறைத்து காட்டியுள்ளதையும், கீழமை நீதிமன்றத்திற்கு உரிய அதிகார வரம்பு இல்லை என்பதையும் கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது.

v) மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கு சங்கதிகள், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை கீழமை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறிவிட்டது என்றும், கீழமை நீதிமன்றத்தில் 1 முதம் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் குறுக்கு விசாரணையின் போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளையும், உள்ள முரண்பாடுகளையும் கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் பிறப்பித்துள்ள உத்தரவு ரத்து செய்யப்படவேண்டியதாக உள்ளது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாவா சொத்தினை பொறுத்து கூட்டுரிமையாளர்கள் இல்லை என்பதற்கும் பாகவீதம் கிடைக்ககூடியதல்ல என்பதற்கும், மேல்முறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை கீழமை நீதிமன்றம் பரிசீலனை செய்யாமல் தீர்ப்பு வழங்கியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், 2ம் மேல்முறையீட்டாளருக்கு ஏற்படுத்தியுள்ள ஆவணங்களை மறைப்பதற்காக 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமலும், விபத்திற்கான வழக்கில் கூறப்பட்டுள்ள சங்கதிகளும் இந்த வழக்கு சங்கதிகளும் முரண்பாடுகள் உள்ளதை கருத்தில் கொள்ளாமலும் பிறப்பித்துள்ள உத்தரவு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், கீழமை நீதிமன்ற தீர்ப்பில் சட்டவிதிமுறைகள் மற்றும் முன்தீர்ப்புகள் இந்த வழக்கிற்கு பொருந்தாது என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது.

vi) கீழமை நீதிமன்றத்தில் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு

ஆவணங்கள் உண்மை தன்மை வாய்ந்தது அல்ல என்பதையும், ஆவணங்கள் இந்திய சாட்சிய சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ளகூடியது அல்ல என்பதையும் கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் வழங்கியுள்ள உத்தரவு ரத்து செய்யப்படவேண்டியதாக உள்ளது என்றும், கீழமை நீதிமன்றத்தின் உத்தரவானது வழக்கின் சாட்சியத்தையும், ஆவணங்களையும் சரிவர பரிசீனை செய்யாமல் வழங்கியுள்ள தீர்ப்பு ரத்து செய்யப்படவேண்டியதாகும் என்றும், எந்தவித முகாந்திரமும் இல்லாமல், சொத்தினை அபகரிப்பதற்காக 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள் கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கினை இந்த மேல்முறையீட்டின் மூலம் தள்ளுபடி செய்து மேல்முறையீட்டினை அனுமதித்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும், இல்லாவிடில் பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே திருத்துறைப்பூண்டி மேன்மைமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 57/2013ல் கடந்த 28.03.2017 அன்று வழக்கினை அனுமதித்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையினை ரத்து செய்து மாற்றி அமைத்து கீழமை நீதிமன்ற வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிட்டு மேல்முறையீட்டினை அனுமதிக்க வேண்டும்.

8) **மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சனைகள்**:

| | |
|---|---|
| 1) | தாவா சொத்துக்களில் உபய வாதிகளுக்கு தலா ஒரு பாக வீதம் பாகம் பெற உரிமை படைத்தவர்கள் என முதல் நிலை தீர்ப்பாணை வழங்கியுள்ளது சரியா ? |
| 2) | விசாரணை நீதிமன்றம் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை முறையாக பரிசீலனை செய்து வழக்கினை தீர்மானம் செய்துள்ளதா? அல்லது இந்த மேல்முறையீட்டின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையீடு அவசியமா? இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா? |

9. இந்த மேல்முறையீட்டின் சுருக்கம், தெளிவு மற்றும் வசதிக்காக தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கபட்டவாறே வாதிகள், பிரதிவாதிகள் என அழைக்கப்படுவார்கள்.

**10.** தாவா சொத்துக்களை பொறுத்து 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ வாதிகளால், மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக 3/11–ல் பாகம் பாகப்பிரிவினை வழங்க கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், அதை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகளால் கட்சியாடி வந்தும் முழு விசாரணைக்கு பிறகு எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கில் 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ வாதிகள் தாவா சொத்துக்களில் 3/11 பாகம் பெற உரிமையுள்ளது என உபய வாதிகளுக்கும் தாவா சொத்துக்களில் தலா ஒரு பாகம் பெற உரிமையுள்ளது என முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள் இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

**11) <u>மேல்முறையீட்டாளர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின் சுருக்கம்</u>:**

விசாரணை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது உத்தரவானது சட்டப்படியும், சங்களிகள்படியும் அறவே நிலைநிற்கக்கூடியதல்ல என்றும், ரத்து செய்யப்பட வேண்டியதாக உள்ளது என்றும், தாவா சொத்துக்கள் 2ம் மேல்முறையீட்டாளருக்கு ஆவணங்கள் மூலமாக கிடைக்கப்பெற்றுள்ளதையும், சொத்தின் அனுபவம் 2ம் மேல்முறையீட்டாளர் வசம் உள்ளதையும் கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் பிறப்பித்துள்ள உத்தரவு ரத்து செய்யப்படவேண்டியது என்றும், இறந்துபோன ராமச்சந்திரன் என்பவருக்கு

கும்பகோணம், சுந்தரபெருமாள் கோயிலில் உள்ள சொத்தினை சேர்க்காமல் விடுபட்டுள்ளதையும், பகுதி பாகப்பிரிவினை கோரமுடியாது என்பதையும் விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறிவிட்டது.

12) மேலும், இறந்துபோன ராமச்சந்திரன் விபத்தில் இறந்துபோனதால் அதற்குறிய நஷ்ட ஈட்டு தொகையினை 1 முதல் 3 மற்றும் 5 எதிர்மேல்முறையீட்டாளர்கள் மட்டும் உண்மையான வாரிசுகளை விடுத்து மோசடி ஆவணங்கள் மூலம் நஷ்ட ஈட்டு தொகை பெற்று பிரிக்கப்பட்டுள்ள விவரம் விசாரணை நீதிமன்றத்திற்கு தெரிந்தும் அந்த தொகையும் பாகப்பிரிவினைக்கு உட்பட்டது தான் என்பதை கருத்தில் கொள்ளாமல் அந்த தொகையினையும், இதர சொத்துக்களையும் விடுத்து பிறப்பித்துள்ள உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டியதாக உள்ளது.

**13)** மேலும், ராமச்சந்திரன் மற்றும் 1வது எதிர்மேல்முறையீட்டாளர் ஆகியோர்கள் 2ம் மேல்முறையீட்டாளரிடம் தொகையினை பெற்றுக்கொண்டுவிட்டபடியால் தாவா சொத்தில் எந்தவித பாகவீதமும் எதிர்மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் விசாரணை நீதிமன்றத்தில் ஒட்டு மொத்தமாக வழக்கினை நடத்தியுள்ள விபரத்தினையும், எதிர்மேல்முறையீட்டாளர் வசம் எந்தவித அனுபவமும் இல்லை என்ற விபரத்தினையும், தவறான வழக்குமூலம் என்பதையும், தவறான மதிப்பீட்டு விவரம் என்பதையும் கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் வசம் எந்தவித அனுபவமும் இல்லாத நிலையில் மதிப்பீட்டினை குறைத்து காட்டியுள்ளதையும், விசாரணை நீதிமன்றத்திற்கு உரிய அதிகார வரம்பு இல்லை

என்பதையும் கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்றும், மேல்முறையீடடாளர்கள் தரப்பு வழக்கு சங்கதிகள், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றத்தில் 1 முதம் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாப்பில் குறுக்கு விசாரணையின் போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளையும், உள்ள முரண்பாடுகளையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் பிறப்பித்துள்ள உத்தரவு ரத்து செய்யப்படவேண்டியதாக உள்ளது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாவா சொத்தினை பொறுத்து கூட்டுரிமையாளர்கள் இல்லை என்பதற்கும் பாகவீதம் கிடைக்ககூடியதல்ல என்பதற்கும், மேல்முறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்யாமல் தீர்ப்பு வழங்கியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

14) மேலும், 2ம் மேல்முறையீட்டாளருக்கு ஏற்படுத்தியுள்ள ஆவணங்களை மறைப்பதற்காக 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமலும், விபத்திற்கான வழக்கில் கூறப்பட்டுள்ள சங்கதிகளும் இந்த வழக்கு சங்கதிகளும் முரண்பாடுகள் உள்ளதை கருத்தில் கொள்ளாமலும் பிறப்பித்துள்ள உத்தரவு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், விசாரணை நீதிமன்றத்தில் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு ஆவணங்கள் உண்மை தன்மை வாய்ந்தது அல்ல என்பதையும், ஆவணங்கள் இந்திய சாட்சிய சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ளகூடியது அல்ல என்பதையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் வழங்கியுள்ள உத்தரவு ரத்து

செய்யப்படவேண்டியதாக உள்ளது என்றும், தாவா சொத்திற்கு எவ்வித உரிமையும் இல்லாமல் சொத்தினை அபகரிப்பதற்காக 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்தும், மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மேல்முறையீட்டு வழக்கை எதிர்மேல்முறையீட்டாளர்களின் செலவுத் தொகையுடன் அனுமதிக்க வேண்டுமென வாதுரைக்கப்பட்டது.

**15)** மேலும், மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தாவா 'B' அட்டவணையில் கண்ட சொத்தை பொறுத்து ராமச்சந்திர முதலியார் என்பவர் கடந்த 20.02.1996-ல் ரூ.75,000/-ம் பெற்றுக்கொண்டு ராமச்சந்திர முதலியார் குமாரர் 2ம் மேல்முறையீட்டாளர் அவரது மகனான ஆர்.கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு விற்றுவிட்டதாகவும், அந்த தொகையை பெற்றுக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் பற்று சீட்டு எழுதிக்கொடுத்துள்ளதால் தாவா 'பி' அட்டவணை சொத்தில் 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு எவ்வித பாகமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், மேற்படி 'பி' அட்டவணையில் கண்ட சொத்திற்கு 2ம் மேல்முறையீட்டாளருக்கு மட்டுமே உரிமையுடையது என்றும், பின்னர் 29.05.2013-ல் 2ம் மேல்முறையீட்டாளருக்கு 1, 3 மற்றும் 4 ஆகிய மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள் தாவா 'A' அட்டவணையில் கண்ட சொத்தை பொறுத்து அவரின் பாக உரிமையை விட்டு கொடுத்து 2ம் மேல்முறையீட்டாளர்/ 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பாகப் பாத்திய விடுதலை பத்திரத்தின்படி தாவா 'A' அட்டவணையில் கண்டுள்ளதை 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் எவ்வித பாக உரிமை பெற அருகதை கிடையாது என்றும், மேற்படி 20.02.1996-ல் ஏற்பட்ட ஆவணத்தை 29.05.2013-ல் ஏற்பட்ட ஆவணங்களையும் விசாரணை நீதிமன்றம் சரியான முறையில் பரிசீலனை செய்யாமல் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கியுள்ளது

சட்டப்படி தவறு என்றும், முதல் நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்தும், இந்த மேல்முறையீட்டாளர்கள் மனுவை அனுமதிக்க வேண்டு என்றும், மேலும் 21.11.1995ம் தேதியில் 1ம் வாதியின் கணவரும், 2, 3 வாதிகளின் மற்றும் பிரதிவாதிகளின் தந்தையான ராமச்சந்திர முதலியார் அவரது சொந்த பணத்தை கொண்டு 1ம் வாதி பெயரில் கிரயம் பெற்ற சொத்தை அசல் வழக்கில் சேர்க்காததால் அசல் வழக்கு பகுதி பாத்திய பாகப்பிரிவினை கோட்பாட்டின்படி தடை ஏற்பட்டுள்ளதை விசாரணை நீதிமன்றம் சரிவர பரிசீலனை செய்யாமல் அசல் வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளது சட்டத்திற்கு விரோதமானது என்றும், எனவே இந்த மேல்முறையீட்டு வழக்கை அனுமதித்து விசாரணை நீதிமன்றம் வழங்கிய முதல் நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டியது என வாதுரைக்கப்பட்டது.

16) <u>எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1 முதல் 3 வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின் சுருக்கம்</u>:

வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் இறந்தபோன ராமச்சந்திரன் அவர்களுடைய சட்டப்பூர்வமான வாரிசுகள் ஆவார்கள் என்றும், 1–ம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தகப்பனாருமான ராமச்சந்திரன் அவர்களின் முதல் மனைவி காளிமுத்து அவர்கள் மூலம் பிறந்தவர்கள் தான் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆவார்கள் என்றும், ராமச்சந்திரன் அவர்கள் அவரது முதல் மனைவி காலமான பிறகு சாவித்திரி என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு அவர் மூலம் பிறந்தவர்கள் தான் 5 முதல் 8 பிரதிவாதிகள் ஆவார்கள் என்றும், இவர்களுடன் பிறந்த தனபாலன், ரோஜாமணி ஆகியோர்கள் திருமணம் ஆகாமலேயே காலமாகிவிட்டனர் என்றும், ராமச்சந்திரன் அவர்கள் தனது 2வது மனைவி இறந்த பிறகு 1வது வாதியை திருமணம் செய்து கொண்டு அவர்கள் மூலம் பிறந்தவர்கள்தான் 2, 3 வாதிகள் ஆவார்கள் என்றும், தாவா

சொத்துக்கள் என்பது காலஞ்சென்ற ராமச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான சொத்துக்களாகும்.

**17.** தாவா 'அ' அட்டவணை சொத்துக்கள் என்பது ராமச்சந்திரன் அவர்களால் 28.02.1958ம் தேதியிட்ட கிரய சாசனத்தின் மூலமும், 08.03.1958ம் தேதியிட்ட கிரய சாசனத்தின் மூலமும், கிரயம் பெறப்பட்ட சொத்துக்களில் ராமச்சந்திரன் அவர்களால் 1வது வாதிக்கும், 2, 4 பிரதிவாதிகளுக்கும் 30.11.1982 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலம் கொடுக்கப்பட்ட மற்றும் 04.08.1987ம் தேதியில் கிரய சாசனத்தின் மூலம் விஜயலெட்சுமி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்கள் போக மீதமுள்ள சொத்துக்களாகும் என கூறியுள்ளார்.

**18.** தாவா ஆ அட்டவணை சொத்து என்பது ராமசந்திரன் அவர்களுக்கு சொந்தமான குடியிருப்பு மனை மற்றும் வீடாகும் என்றும், தாவா சொத்துக்களை ராமச்சந்திரன் அவர்கள் உயிருடன் இருக்கும் வரை தன் வசம் வைத்து அனுபவம் செய்து வந்தார் என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து ராமச்சந்திரன் அவர்கள் எந்தவித ஏற்பாடுகளும் செய்து வைக்காத நிலையில் துர்திருஷ்டவசமாக கடந்த 28.10.1997ம் தேதியில் விபத்தில் காலமாகிவிட்டார் என்றும், காலஞ்சென்ற ராமச்சந்திரன் அவர்களுக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் சட்டப்படியான வாரிசுகள் என்பதால் இந்த வகையில் ராமச்சந்திரன் அவர்களால் விட்டு செல்லப்பட்ட தாவா சொத்துக்களை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் சமமாக அடைந்து கொள்ள உரிமை படைத்தவர்கள் ஆவார்கள் என்றும், தாவா சொத்துக்கள் என்பது ராமச்சந்திரன் காலமான பிறகு பிரிவினை செய்யப்படாமல் பொதுவில் இருந்து வருகிறது என்றும், தாவா சொத்துக்கள் பொதுவில் பிரிவினை செய்யப்படாமல் இருந்து

வந்ததால் அது வாதிகளுக்கு பயன் அளிக்காது என்பதால் வாதிகள், பிரதிவாதிகள் அனைவரிடமும் தாவா சொத்துக்களை முறையாக பிரிவினை செய்துகொள்ளலாம் என்று தெரிவித்தும் அதற்கான நடவடிக்கைகளை பிரதிவாதிகள் எடுக்கவில்லை என்றும், இந்த சூழ்நிலையில் தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதற்காக வாதிகள் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வந்ததை தெரிந்து கொண்ட 3–ம் பிரதிவாதி முற்றிலும் தவறான சங்கதிகளை சொல்லி வாதிகளுக்கு 13.03.2013 தேதியிட்டு கையெழுத்து செய்து 13.04.2013ம் தேதியில் ஒரு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றும், இந்த அறிவிப்பிற்கு வாதிகளால் 18.05.2013ம் தேதியிட்டு ஒரு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும், தான் சொத்துக்கள் என்பது பிரிவினை ஆகாமல் பொதுவில் இருந்து வரும் நிலையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் கூட்டுரிமையாளர்கள் மற்றும் கூட்டு அனுபவதாரர்கள் என்ற அடிப்படையில் வரக்கூடியவர்கள் ஆவார்கள் என்றும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 3/11 பாகவீத உரிமை உள்ளது என்றும், அதேபோல் பிரதிவாதிகளுக்கும் தலா 1/11 பாகவீதம் உரிமையுள்ளது என்றும், தாவா சொத்துக்கள் அனைத்தும் இறந்துபோன ராமச்சந்திரன் என்பவரால் சுயமாக கிரயம் பெற்ற சொத்துக்கள் என்றும், 1ம் வாதி இறந்துபோன ராமச்சந்திரன் என்பவரின் 3வது மனைவி என்றும், 2, 3 வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இறந்துபோன ராமச்சந்திரன் என்பவரின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் ஆவார்கள் என்றும், தாவா சொத்தை பொறுத்து வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தாவா சொத்துகளானது ராமச்சந்திரன் என்பவருக்கு பாத்தியப்பட்ட பிரிப்படாத சொத்து என்பதும், உபய வாதிகள் இறந்துபோன ராமச்சந்திரன் வாரிசுகள் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளதால் தாவா சொத்துக்களில் உபய வாதிகளுக்கு தலா ஒரு பாகம் பாகவீதம் பெற உரிமை படைத்தவர்கள் என முதல்நிலை

தீர்ப்பாணை விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது சரிதான் என்றும், அந்த முதல் நிலை தீர்ப்பின் அடிப்படையில் இந்த மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகளால் இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படியும், பொருண்மை படியும் நிலைநிற்கதக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றும், 1ம் வாதியை இறந்துபோன ராமச்சந்திர முதலியார் என்பவர் சட்டப்படி முறையாக திருமணம் செய்து கும்பகோணத்தில் உள்ள சுந்தர பெருமாள் கோவில் கிராமத்தில் வசித்து வந்துள்ளார்கள் என்பதும், 1ம் வாதிக்கும் இறந்துபோன ராமச்சந்திரன் என்பவருக்கும் 2, 3 வாதிகள் வாரிசுதாரர்கள் என்றும், 1ம் வாதி கும்பகோணம் சுந்தர பெருமாள் கோவில் கிராமத்தில் வசித்து வந்த பொழுது தன்னிச்சையாக 21.11.1995–ம் தேதியில் ஒரு சொத்தை அவரது பெயரில் கிரயம் பெற்றுள்ளார் அந்த சொத்திற்கு 1ம் வாதியே உரிமையாளர் என்றும், இறந்துபோன ராமச்சந்திரன் 1ம் வாதி பெயரில் பிணாமியாக வாங்கி கொடுத்துள்ளதை மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சிகளையும், ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், மேற்படி சொத்தானது அசல் வழக்கில் சேர்க்காததால் பகுதி பாத்திய கோட்பாட்டின்படி எவ்வித பாதிப்பும் இல்லை என்றும், மேற்படி சொத்தானது வாதிக்கு தனிப்பட்ட சொத்து என்றும், கூட்டுகுடும்ப சொத்து அல்ல என்றும், மேலும், மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் 20.02.1996–ம் தேதியில் 2ம் மேல்முறையீட்டாளர்/ 2ம் பிரதிவாதிக்கு தாவா 'B' அட்டவணை சொத்தை விற்பனை செய்வதற்கு கிரய தொகை ரூ.75,000/– பெற்றுக்கொண்டதற்கு 2ம் மேல்முறையீட்டாளருக்கு கொடுத்த பற்று சீட்டு உண்மை அல்ல என்றும், ராமச்சந்திர முதலியார் என்பவரால் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த மேற்கண்ட பற்று சீட்டினை மட்டுமே கொண்டு தாவா 'B' அட்டவணை சொத்திற்கு உரிமை கோர முடியாது என விசாரணை நீதிமன்றம் சரியாக தீர்வு கண்டுள்ளது என்றும், 2ம் பிரதிவாதி வாதத்தை விசாரணை

நீதிமன்றம் நிராகரித்து உள்ளது என்றும், இறந்துபோன ராமச்சந்திரன் என்பவர் தான் 'B' அட்டவணை சொத்தை விற்பனை செய்து கையெழுத்து போட்டு கொடுத்துள்ள பற்று சீட்டினை 2ம் பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மூலம் நிரூபிக்கவில்லை என விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது என்றும், 29.05.2013ம் தேதியில் 2ம் மேல்முறையீட்டாளர்/2ம் பிரதிவாதிக்கு 1, 3 மற்றும் 4 மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பாகப் பாத்திய விடுதலை பத்திரம் 1 முதல் 3 வாதிகளை/எதிர்மேல்முறையீட்டாளர்களை கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி பாகப் பாத்திய விடுதலை பத்திரத்தில் வாதிகள் 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் யாரும் எழுதிக்கொடுத்து கையெழுத்து போடவில்லை என்பதால் மேற்படி பாக பாத்திய விடுதலை பத்திரம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி பாகப் பாத்திய விடுதலை பத்திரத்தை மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், முன்னிலைப்படுத்தாததற்கு உரிய காரணங்கள் எதுவும் மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் சொல்லவில்லை என்றும், இந்த மேல்முறையீட்டு வழக்கில் மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கூடுதலாக ஆவணங்கள் ஏற்க உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 41 விதி 27–ன் கீழ் இம்மனுவுடன் பல்வேறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி ஆவணங்கள் அனைத்தும் மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்பொழுது தாக்கல் செய்துள்ளதால் மேற்கண்ட ஆவணங்கள் இந்த மேல்முறையீட்டு வழக்கில் கூடுதல் ஆவணங்களாக ஏற்க முடியாது என்றும், மேல்முறையீட்டு வழக்கில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் அசல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புக்கு முன்பாகவே ஏற்பட்ட ஆவணங்கள் என்றும், மேற்கண்ட ஆவணங்களை மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்யாமல் இந்த மேல்முறையீட்டு வழக்கில் புதிதாக தாக்கல் செய்தும், அதற்கான

காரணங்களை சொல்லவில்லை என்றும், தாவா சொத்தை பொறுத்து இறந்துபோன ராமச்சந்திர முதலியார் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 20.02.1996ம் தேதியில் ஏற்பட்ட பற்று சீட்டு, 29.05.2013ம் தேதியில் ஏற்பட்ட பாகப் பாத்திய விடுதலை பத்திரம், 19.05.2002ம் தேதியில் 1ம் வாதி கௌரி எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தம் ஆகிய ஆவணங்களை மட்டுமே கொண்டு தாவா சொத்து முழுவதும் 2ம் பிரதிவாதிக்கு தான் பாத்தியப்பட்டுள்ளது என கூறுவது ஏற்ககூடியதல்ல என விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது சரிதான் என்றும், 2ம் பிரதிவாதி தரப்பில் மேலே சொல்லப்பட்ட ஆவணங்கள் முறையாக அவரது பெயருக்கு பதிவு செய்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்துவிட்டு தற்போது மேற்படி ஆவணங்களை கொண்டு தாவா சொத்துக்களில் 2ம் பிரதிவாதிக்கு மட்டுமே உரிமையுள்ளது என்றும், மற்ற தரப்பினருக்கு உரிமையில்லை என கூறும் கூற்று விசாரணை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு உள்ளது சரிதான் என்றும், இறந்துபோன ராமச்சந்திர முதலியாருக்கு சொந்தமான, உரிமையுள்ள அவரால் செண்டில்மெண்ட் மற்றும் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களை தவிர தாவா சொத்துக்களில் அவரது வாரிசான உபய வாதிகளுக்கு இந்திய வாரிசுரிமை சட்டம் பிரிவு 10-ன் படி தலா ஒரு பாக வீதம் பாகம் பெற உரிமை படைத்தவர்கள் ஆவார்கள் என விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது சரிதான் என்றும், வாதிகளை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் பிரதிவாதிகளால் இந்த மேல்முறையீட்டு வழக்கை எவ்வித உரிமையுமின்றி தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த மேல்முறையீட்டு வழக்கில் மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகளுக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

**19 <u>பிரச்சனை எண்.1 மற்றும் 2–கான தீர்வு</u>:–**

தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளால், பிரதிவாதிகளுக்கு எதிராக 3/11 பாகவீதம் பெற உரிமையுள்ளது என விளம்புகை செய்தும், ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படியும், நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து ஒரு வழக்கறிஞர்/ஆணையரை நியமனம் செய்து வாதிகளுக்குள்ள பாக வீதத்தை நளஇளப்பம் சரிகட்டி பாகவீதம் செய்து கொடுத்து ஒரு இறுதி நிலை தீர்ப்பாணை பிறபிக்க கோரியும், தாவா தாக்கல் செய்யப்பட்டு முழு விசாரணைக்கு பிறகு வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கில் தாவா சொத்துக்களில் உபய வாதிகளுக்கு தலா ஒரு பாகவீதம் பாகம் பெற உரிமை படைத்தவர்கள் என முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து இந்த மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகளால் இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

**20.** மேற்கண்ட தீர்வுக்குரிய இந்த மேல்முறையீட்டு வழக்கில் கண்ட இருதரப்பு வாதுரைகளையும், சாட்சிகளையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்ததில் இறந்துபோன ராமச்சந்திர முதலியார் என்பவரின் வாரிசுகள் தான் உபய வாதிகள் என்பதும், 1ம் வாதி மனைவி என்பதும், 2, 3 வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள் சட்டப்படியான வாரிசுகள் என உபய வாதிகள் தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

**21.** மேற்கண்ட தீர்வுக்குரிய இந்த மேல்முறையீட்டு வழக்கில் கண்ட தாவா சொத்துக்களை **வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2** ஆவணத்தின்படி இறந்துபோன ராமச்சந்திர முதலியார் என்பவரால் தாவா சொத்துகளை கிரயம் பெற்றுள்ளது

மேற்படி ஆவணங்களிலிருந்து நிரூபணமாகிறது. பின்னர் ராமச்சந்திர முதலியார் என்பவர் பெயரில் வருவாய் துறை மூலமாக வழங்கிய கணினி சிட்டா வழங்கியுள்ளது வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களிலிருந்து அறியமுடிகிறது. மேலும், வா.சா.ஆ.7–ன் படி தாவா 'B' அட்டவணையில் கண்ட சொத்தில் உள்ள வீட்டிற்கு ராமச்சந்திர முதலியார் வீட்டு வரி ரசீது செலுத்தியுள்ளது **வா.சா.ஆ.7**–ன் படி அறிய முடிகிறது. மேலும், 30.11.1982ம் தேதியில் கௌரி அம்மாளுக்கு, ராமச்சந்திரன் என்பவர் எழுதி வைத்த செண்டில்மெண்ட் ஆவணம் **பி.வா.சா.ஆ.3**–ன் படி அறிய முடிகிறது. மேற்படி 1ம் வாதியான கௌரியம்மாள் என்பவருக்கு செண்டில்மெண்ட் மூலம் கிடைக்க பெற்ற சொத்தை கடந்த 31.05.2000ம் தேதியில் கௌரியம்மாள், பழனியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனம் என்பது **பி.வா.சா.ஆ.4**–ன் படி அறிய முடிகிறது.

**22.** மேற்கண்ட தீர்வுக்குரிய இந்த மேல்முறையீட்டு வழக்கில் கண்ட 1ம் வாதியின் கணவரும், மற்ற தரப்பினர்களின் தந்தையான ராமச்சந்திர முதலியார் என்பவர் தான் கிரயம் பெற்ற சொத்தில் செண்டில்மெண்ட் பத்திரம் மற்றும் கிரயம் செய்து கொடுத்த சொத்துக்களை தவிர தாவா சொத்துக்கள் அனைத்தும் இறந்துபோன ராமசந்திரன் என்பவருக்கு பாத்தியப்பட்டுள்ளதால் வாதிகள் வாரிசுதாரர்கள் என்ற முறையில் அசல் வழக்கை மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், அதை எதிர்த்து பிரதிவாதிகள் கட்சியாடி வந்தும், உபய வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தாவா சொத்துக்களானது ராமச்சந்திரமுதலியார் என்பவருக்கு சொந்தமானது என்பதும், உபய வாதிகள் ராமசந்திர முதலியார் என்பவருக்கு வாரிசுகள் என்பதாலும் தாவா சொத்துக்களில் உபய வாதிகளுக்கு

தலா ஒரு பாகவீதம் உரிமையுள்ளது என விளம்புகை செய்து முதல் நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**23.** மேலும், கற்றறிந்த மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையின் போது 1ம் வாதி பெயரில் கணவர் என்ற முறையில் 21.11.1995ம் தேதியன்று கும்பகோணத்திலுள்ள சுந்தர பெருமாள் கோவில் கிராமத்தில் கிரயம் பெற்றுள்ள சொத்தை ஆர்.எஸ்.35ல் 8–A1–ல் 1123.3/4 சதுர அடி காலி மனையும் அதிலுள்ள தென் மரத்தையும் லேட்.கருப்பையா மூப்பனார் குமாரர்கள் கே.பழனிச்சாமி, நடராஜன் ஆகியோர்களிடமிருந்து மேற்படி புல எண்ணில் கண்ட சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி சொத்தானது ராமச்சந்திர முதலியார் என்பரால் பிணாமியாக 1ம் வாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்டுள்ளது என்றும், அந்த சொத்தையும், இந்த பாகப்பிரிவினை வழக்கில் சேர்த்து பரிகாரம் கோரததால் அசல் வழக்கு பகுதி பாத்திய கோட்பாட்டின்படி பாதிப்பு அடைந்துள்ளது என்றும், தாவா 'B' அட்டவணை சொத்தை 20.02.1996ல் ராமச்சந்திர முதலியார் 2ம் பிரதிவாதிக்கு கிரய தொகையாக ரூ.75,000/–ம் பெற்றுக்கொண்டு அதற்கு பற்று சீட்டு கொடுத்துள்ளார் என்றும், அதன்படி தாவா 'B' அட்டவணையில் கண்டுள்ள சொத்து 2ம் பிரதிவாதிக்கு உரிமையானது என்றும், அந்த சொத்தில் வாதிகளுக்கு எவ்வித பாக உரிமையும் பெற அருகதை கிடையாது என்றும், பின்னர் 29.05.2013–ல் 2ம் பிரதிவாதிக்கு 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பாகப் பாத்திய விடுதலை பத்திரத்தில் தாவா 'A' அட்டவணை சொத்தை பொறுத்து எழுதி கொடுக்கப்பட்ட அந்த பத்திரம் முறையாக சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் தாவா 'A' அட்டவணையில் கண்டுள்ள சொத்துக்கள் முழுவதும்

2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றும், வாதிகளுக்கு மேற்படி 'A' அட்டவணை சொத்தில் எவ்வித பாக உரிமையும் பெற உரிமையில்லை என்றும், 19.05.2002ம் தேதியில் 2ம் பிரதிவாதிக்கு, 1ம் வாதி எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தத்தின்படி தாவா 'A' அட்டவணையில் 1வது அயிட்ட சொத்தான 170/1B யில் 1 ஏக்கர் 33.1/2 செண்ட் மட்டும் 1ம் வாதியும், 2ம் பிரதிவாதியும் செய்து கொண்ட கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றும், அந்த கிரய ஒப்பந்தத்தின்படி தாவா 'A' அட்டவணையில் உள்ள 1வது இனச் சொத்து 2ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டுள்ளது என்றும், 'A' அட்டவணையில் உள்ள 1வது இனச் சொத்தில் வாதிகளுக்கு எவ்வித பாக உரிமையும் இல்லை என்றும், மேற்படி கிரய ஒப்பந்தத்தின்படி அடிப்படையில் பத்திரம் காலவரையறை சட்டத்தால் பாதிப்பு அடையவில்லை என தனது வாதுரைக்கு ஆதரவாக மாண்புமை இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய கீழ்கண்ட முன் தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதிடப்பட்டார்.

**SUPREME COURT OF INDIA**

1. Author : Kuldip singh

Bench : Kuldip Singh, P.B.Sawant

Petitioner S.P. CHENGALVARAYA NAIDU

VS.

RESPONDENT : JAGANNATH

DATE OF JUDGEMENT 27.10.1993

2. Author : P.Sathasivam

Bench : Arijit Pasayat, P.Sathasivam

Case No. Appeal (Civil) 647 of 2008

Petitioner : Balasaheb Dayandeo Naik (Dead) through Lrs & Ors

Respondent : Appasaheb Dattatraya Pawar

Date of Judgement : 24.01.2008

Bench : Dr. Arijit Pasayat & P.Sathasivam

3. Petitioner : Indian Bank

Vs.

Respondent : M/S Satyam Fibres (India) PVT Ltd.

Date of Judgement : 09.08.1996

Bench : Kuldip Singh, S.Saghir Ahmad

4. Case No. Appeal (Civil ) 7579 of 1999

Petitioner : Bondar singh & ors.

vs.

Respondent : Nihal Singh & Ors.

Date of Judgement : 04.03.2003

Bench : R.C. Lahoti & Arun Kumar

மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட முன் தீர்ப்புகள் இந்த மேல்முறையீட்டு வழக்கின் பொருண்மைகளுக்கும், சங்கதிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

24. மேற்கண்ட தீர்வுக்குரிய மேல்முறையீட்டு வழக்கில் கண்ட பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்ட கிரய ஒப்பந்தத்தை பரிசீலனை செய்ததில் 19.05.2002ல் 1ம் வாதியும், 2ம் பிரதிவாதியும் தாவா 'A' அட்டவணையில் உள்ள 1வது இனச் சொத்தை பொறுத்து செய்து கொண்ட கிரய ஒப்பந்த பத்திரம் என்றும், மேற்படி கிரய ஒப்பந்தத்தில் மொத்த கிரய

தொகை ரூ.68,000/- என்றும், கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் கிரயம் செய்துக்கொள்ள வேண்டியது என பி.வா.சா.ஆ.2ன்படி அறிய முடிகிறது. பி.வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்டு 11 ஆண்டுகளாக 2ம் பிரதிவாதி கிரய ஒப்பந்தின் அடிப்படையில் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மேற்படி கிரய உடன் படிக்கை பத்திரத்தில் காலவரையறை என்பது 1வருட காலம் என நிர்ணயம் செய்து எழுதப்பட்டுள்ளதும், 11 ஆண்டுகள் ஆகியும் மேற்கண்ட ஆவணத்தின் அடிப்படையில் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காததால் கிரய ஒப்பந்தின் அடிப்படையில் மட்டுமே ஆவணங்கள் ஏதும் சொத்துரிமை மாற்று சட்டத்தின்படி 2ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்யாமல் தாவா 'A' அட்டவணையில் உள்ள 1ம் இனச் சொத்தில் உரிமை கோர முடியாது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. கிரய உடன் படிக்கை பத்திரத்தை மட்டுமே கொண்டு தாவா சொத்தில் எவ்வித உரிமை மூலமும் கோர முடியாது என்றும், கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் எவ்வித சொத்தின் உரிமை மாற்றமும், சொத்து உரிமை மாற்று சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டு கிரய ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் சொத்தின் உரிமை மாற்றம் ஏற்படாது என்றும், ஒப்பந்தத்தை மட்டுமே கொண்டு உரிமை கோர முடியாது என்றும், சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ் கண்ட முன் தீர்ப்பில் தீர்வு கண்டுள்ளது இந்த வழக்கின் பொருண்மைகளுக்கும், சங்கதிகளுக்கும் பொருந்துவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**MADRAS HIGH COURT**

1. (2020) 3 CTC 834

SINGLE BENCH

NAGARATHINAM . .. . . Appellant

Vs.

P.DURAISAMY GOUNDER . . . . Respondent

(Before : Rmt Teekaa Raman, J.)

Second Appeal No. 1751 of 2001

Decided on : 27.01.2020

2. (2022) 7 MLJ 296

SINGLE BENCH

KUPPUSWAMY PILLAI . . . .Appellant

Vs.

RAMAMURTHI PILLAI AND OTHERS . . .. Respondent

(Before : C.V. Karthikeyan, J.)

S.A.No. 1686 of 2003

Decided on : 20.07.2022

25. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் 21.11.1995ம் தேதியில் 1ம் வாதி பெயரில் ராமச்சந்திர முதலியார் அவரது சொந்த பணத்தை கொண்டு பிணாமியாக கிரயம் பெற்றுள்ளதால் அந்த சொத்தையும் இந்த அசல் வழக்கில் சேர்க்காததால் பகுதி பாத்திய கோட்பாட்டின்படி அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது. மேற்படி கிரய ஆவணத்தை பரிசீலனை செய்ததில் 1ம் வாதி பெயரில் கிரயம் பெற்றுள்ளதும், பதிவு செய்யப்பட்டுள்ளதும் அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்தில் ராமச்சந்திர முதலியார் பிணாமியாக 1ம் வாதி பெயரில் கிரயம் பெற்றுள்ளார் என்பதை நிரூபிக்கும்பொருட்டு பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் எவ்வித சாட்சிகளையும், ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தாத நிலையில் 1ம் வாதி பெயரில் உள்ள சொத்தானது 1ம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், இந்திய வாரிசுரிமை சட்டம் பிரிவு 14 (1)–ன் படி ஒரு பெண்ணின் பெயரில் கிரய ஆவணம் ஏற்பட்டிருந்தால் அந்த சொத்தானது அந்த பெண்ணின் தனிப்பட்ட

சொத்து என்றும், அந்த பெண்ணிற்கு முழு உரிமை உள்ள சொத்து என மேற்கண்ட சட்டப்பிரிவின்படி கண்டுள்ள நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் கூறுவது போல மேற்படி சொத்தானது அசல் வழக்கில் சேர்க்காததால் பகுதி பாக பாத்திய பாகப்பிரிவினை கோட்பாட்டின்படி எவ்வித பாதிப்பும் இல்லை என்றும், அந்த சொத்தானது 1ம் வாதிக்கு சொந்தமான சொத்து என்றும், பிரதிவாதிகள் பிணாமி சொத்து என கூறும் வாதம் ஏற்கதக்கதல்ல என்றும், மனைவி பெயரில் சொத்து கிரயம் பெற்றால் அந்த சொத்து பிணாமியாக கருத இயலாது என மாண்புமை சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய கீழ் கண்ட முன் தீர்ப்பின்படி இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

Radhakrishnan @ Krishnamurthy Naidu

... vs

Pandurangan on 22 January, 2026

S.A.No.119 of 1999

மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் 1ம் வாதி பெயரில் கிரயம் பெற்ற சொத்தானது பிரிப்படாத கூட்டு குடும்ப சொத்து என்றும், பிணாமி சொத்து என கூறும் வாதம் ஏற்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**26.** மேலும், தாவா 'B' அட்டவணை சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதியின் தந்தையான ராமச்சந்திர முதலியார் என்பவர் 20.02.1996ம் தேதியில் கிரய தொகை ரூ.75,000/-ம் பெற்று கொண்டு பற்று சீட்டின்படி தாவா 'B' அட்டவணையில் கண்ட சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கு மட்டுமே உரிமையுடையதா என பரிசீலனை செய்ததில் 20.02.1996ம் தேதியில் வெள்ளை தாளில் ரூ.1க்கான முத்திரை வில்லையில் ராமச்சந்திர முதலியார் கையொப்பம் செய்து கொடுத்துள்ளதன் அடிப்படையில் 'B' அட்டவணையில் கண்ட சொத்து

2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ளது என பிரதிவாதிகள் தரப்பில் வாதுரைக்கப்பட்டது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இறந்துபோன ராமச்சந்திரன் தான் 2ம் பிரதிவாதிக்கு மேற்படி பற்று சீட்டை எழுதிக் கொடுத்துள்ளார் என்பதை நிரூபிக்கும்பொருட்டு எவ்வித சாட்சியும், சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்பதால் மேற்கண்ட பற்று சீட்டினை மட்டுமே கொண்டு தாவா 'B' அட்டவணையில் கண்ட சொத்தை 2ம் பிரதிவாதிக்கு உரிமையுள்ளது என கூறும் வாதம் ஏற்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**27.** மேற்கண்ட தீர்வுக்குரிய இந்த மேல்முறையீட்டு வழக்கில் கண்ட பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 41 விதி 27 மற்றும் பிரிவு 151ன் கீழ் இடை மனு எண்கள்.5/2025, 6/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை இந்த மேல்முறையீட்டு வழக்கில் குறியீடு செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த மேல்முறையீட்டு வழக்கின் தீர்வுக்கு உறுதுணையாக இருக்கும் என்றும், மேற்படி ஆவணங்கள் மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட வேண்டியது அவசியம் என வாதுரைக்கப்பட்டது. இ.ம.எண்.5/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களான 1, 2 வரையிலான ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே ஏற்பட்ட ஆவணங்கள் என்பதும், மேற்கண்ட ஆவணங்களை 2ம் பிரதிவாதி தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்ததாதற்கான உரிய காரணத்தை தெரிவிக்காத நிலையிலும், மேற்கண்ட ஆவணத்தை விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய மறுக்கப்பட்டுள்ளதை நிரூபிக்கும்பொருட்டு பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சிகளையும், சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை என்பதும்,

மனுவில் கண்ட ஆவணங்கள் இந்த மேல்முறையீட்டு வழக்கின் தீர்வுக்கு உகந்ததாக இல்லை என்பதும், மனுவில் 4வது ஆவணமாக கண்டுள்ள பாகப் பாத்திய விடுதலை பத்திரத்தை பரிசீலனை செய்ததில் 29.05.2013ல் 2ம் பிரதிவாதி கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு ராமச்சந்திரன் மகன் ஆர்.முருகையன், கல்யாணசுந்தரம் மற்றும் அமுதவள்ளி ஆகிய மூவரும் புல எண்.170/1பி நஞ்சை நிலத்தையும், புல எண்.133 நஞ்சை நிலத்தையும் பாக பாத்திய விடுதலை பத்திரம் மூலமாக 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளதும் அறிய முடிகிறது. மேற்படி பத்திரத்தில் வாதிகள் யாரும் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்பதும், மேற்படி ஆவணம் 29.05.2013ம் தேதியில் எழுதப்பட்டுள்ளதும், திருத்துறைப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதும் அறிய முடிகிறது. அந்த பாக பாத்திய விடுதலை பத்திரம் ஏற்பட்ட பிறகு தான் ஜூலை மாதம் 2013-ல் வாதிகள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அந்த பாக பாத்திய விடுதலை பத்திரம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்பதும், அந்த பாகப் பாத்திய விடுதலை பத்திரத்தின்படி 2ம் பிரதிவாதிக்கு அவரது பாகம் உட்பட 4/11 பாகம் மட்டும் கிடைக்கக்கூடியது என்றும், மேற்படி பாக பாத்திய விடுதலை பத்திரம் அடிப்படையில் 2ம் பிரதிவாதி இறுதிநிலை தீர்ப்பாணையின் போது தான் அவருக்குள்ள உரிமையை (equity) தகமை நெறி அடிப்படையில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்றும், முதல் நிலை தீர்ப்பாணையில் அது குறித்து பாக பாத்திய விடுதலை பத்திரத்தை பொறுத்து விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாத நிலையிலும், இந்த மேல்முறையீட்டு வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் இடை மனுகளில் தாக்கல் செய்துள்ள பாகப் பாத்திய விடுதலை பத்திரம் இந்த மேல்முறையீட்டு வழக்கின் தீர்வுக்கு உகந்ததாக இல்லை என்றும், பிரதிவாதிகள் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த மேல்முறையீட்டு வழக்கின் தீர்வுக்கு உகந்ததாக இல்லை என இந்நீதிமன்றம் மேற்படி மனுவுடன் தாக்கல்

செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் கீழ்கண்ட முன் தீர்ப்பின்படி தீர்வு காண்கிறது.

1. 2019 5 LW 204

MADRAS HIGH COURT

SINGLE BENCH

UMADEVI . . . . Appellant

vs.

C.D.ETHIRAJAN (DIED) AND PONNI ARASI AND OTHERS . . . . Respondent

(Before : T.Ravindran. J.)

A.S. No.714 of 2008 and C.M.P. No.20774 of 2016

Decided on : 20.09.2019

"A. Civil procedure Code, 1908 (CPC) – Order 41 rule 27 – Additional evidence at appellate stage – admissibility – Documents sought to be adduced as additional evidence were available and known to the party even during trial court proceeding – No valid reason offered for not producing them earlier – requirements of Order 41 rule 27. "

2. (2021) 5 CTC 199 : (2021) 2 MLJ 218

MADRAS HIGH COURT (MADURAI BENCH)

SINGLE BENCH

S.KARMEGAM (DIED) AND OTHERS . . . .Appellant

Vs.

TMT.PARVATHI AND OTHERS .. .. . Respondent

(Before : N.Sathish kumar, J.

S.A. No.895 of 1999 and C.M.P. No.15075 of 2003)

Decided on : 03.02.2021

A. Civil procedure code, 1908 (CPC) – Order 41 Rule 27 – Additional evidence on appeal – Court's power to receive – Though reception of additional documents is not automatic, relevant documents enabling the court to arrive at a just conclusion can be received, even if the strict ingredients of Order 41 Rule 27 CPC are not met, especially when both parties have no objection to their admission and the documents are registered and relate to the suit property.

**28.** மேற்கண்ட தீர்வுக்குரிய இந்த மேல்முறையீட்டு வழக்கில் கண்ட வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின் போது பி.வா.சா.ஆ.2ன் படி 19.05.2002ம் தேதியில் கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு 1ம் வாதியான கௌரி அம்மாள் எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் எந்த உரிமையும் கோர முடியாது என்றும், மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் அந்த கிரய ஒப்பந்தம் கீழ் கண்ட மாண்புமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய முன் தீர்ப்பின்படி தீர்வு காண விரும்புகிறது.

1. (2018) 1 CTC 528 : (2018) 1 LW 481

MADRAS HIGH COURT (MADURAI BENCH)

SINGLE BENCH

FRANCIS . . .. Appellant

vs.

K.MADHAVAN NAIR . . . . Respondent

(Before : N. Seshasayee. J.,)

S.A. (M.D) No.32 of 2016

Decided on : 20.11.2017

" A. Transfer of property Act, 1882 – Section 54 – Contract for sale of immovable property – Creates no interest in the property itself – purchaser/transferee put in possession under an agreement to sell – Possession is initially lawful but permissive, not vesting any interest in the land – Such possession is protected by section 53–A only as a shield against dispossession by the transferor, not as sword – Protection under section 53–A hinges on the transferee having performed or being willing to perform their part of the contract – Failure to demonstrate willingness to perform contractual obligations (balance payment, seeking specific performance) results in the loss of section 53 – A protection for the lawful possession. "

மேற்கண்ட முன் தீர்ப்பின்படி ஒரு வருட காலத்திற்குள் 2ம் பிரதிவாதி எவ்வித நடவடிக்கை எடுக்காத நிலையில் பி.வா.சா.ஆ.2 ஆன கிரய ஒப்பந்த பத்திரம் காலவரையறை சட்டத்தால் பாதிப்பு அடைந்துள்ளது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**29.** மேலும், மேற்கண்ட தீர்வுக்குரிய மேல்முறையீட்டு வழக்கில் எம்.எஸ்.ராமசந்திரன் என்பவர் சாலை விபத்தில் இறந்தவுடன் 1 முதல் 3 வாதிகள் மற்றும் 7–ம் பிரதிவாதி தனசேகரனும் வாகன விபத்து வழக்கில் வழங்கப்பட்ட நஷ்ட ஈடு தொகையை அவர்களே அடைந்திருக்கிறார்கள் என்றும், 1 முதல் 6 மற்றும் 8 ஆகிய பிரதிவாதிகளுக்கு வாகன விபத்து நஷ்ட ஈடு தொகையில் விகிதாச்சார முறைப்படி கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடு தொகையை கொடுத்த பிறகே இந்த பாகப்பிரிவினை வழக்கு தொடர்வதற்கான தகுதியுடையவர்கள் ஆவார்கள் என வாதுரைக்கப்பட்டதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்ததில் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு மனுவில் வழங்கப்படும் இழப்பீடு என்பது சொத்து (estate) அல்ல, அது இறந்தவரின் சார்பாளர்கள் (legal representatives / dependents) இழந்த வருமானத்துக்கான ஈடு

என்றும், அந்த இழப்பீடு பரம்பரை சொத்தாகப் பகிரப்படாது என்றும், அது பெறும் நபர்களின் தனிப்பட்ட உரிமை (personal compensation) ஆகும். மேலும், யார் இறந்தவரின் வருமானத்தை சார்ந்திருந்தார்கள்? என்பதை பார்த்து தீர்மானிக்கும் என்றும், எனவே மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டில் பங்கு கேட்க முடியாது என்றும், ஆனால், தந்தையின் மற்ற சொத்துகளில் மட்டும் பங்கு கேட்கலாம் என மாண்புமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய பல்வேறு முன் தீர்ப்புகளில் தீர்வு கண்டுள்ளதால் மனுதாரர்களுக்கு வாகன விபத்தில் இறந்துபோன ராமச்சந்திரன் என்பவருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகையில் பாகம் கோர முடியாது என்றும், இறந்துபோன ராமச்சந்திரனுக்கு சொந்தமான சொத்தில் தான் சட்டப்படியான வாரிசுகள் பாகம் கோரலாம் என தீர்வு கண்டுள்ள நிலையிலும், தாவா சொத்துகளை பொறுத்து விசாரணை நீதிமன்றம் வழங்கிய முதல் நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் இறுதி நிலை தீர்ப்பாணை தாக்கல் செய்ய இந்த மேல்முறையீட்டு வழக்கு முடியும் வரை தடை விதிக்க வேண்டுமென கோரும் பரிகாரம் உரிய காரணங்கள் எதுவும் இல்லாத நிலையிலும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையிலும் மனுதாரர்களுக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**30.** மேற்கண்ட தீர்வுக்குரிய இந்த மேல்முறையீட்டு வழக்கில் கண்ட தாவா சொத்துக்களானது 1ம் வாதியின் கணவரும், 2, 3 வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளின் தந்தையான ராமச்சந்திர முதலியார் என்பவருக்கு சொந்தமான, பாத்தியப்பட்டுள்ள சொத்துக்களை 1ம் வாதிக்கும் வேறு சில நபர்களுக்கு கிரயம் செய்து கொடுத்தது போக மீதமுள்ள சொத்து தான் தாவா சொத்துக்கள் என்பதும், தாவா சொத்துக்களை பொறுத்து ராமச்சந்திர முதலியாரின் வாரிசுகளுக்கிடையே எவ்வித பாக பிரிவினையும் ஏற்படாத நிலையில் வாதிகள் தரப்பில் வாரிசுதாரர்கள்

என்ற முறையில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதும், அதை எதிர்த்து பிரதிவாதிகள் தரப்பில் கட்சியாடி வந்தும் அசல் வழக்கில் உபய வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியத்திலிருந்தும், சான்று ஆவணங்களிலிருந்தும் தாவா சொத்துக்களை பொறுத்து உபய வாதிகளுக்கிடையே பாகப் பிரிவினை ஏற்படவில்லை என்பதும், தாவா சொத்துக்கள் அனைத்தும் உபய வாதிகளுக்கு வாரிசுதாரர்கள் என்ற முறையில் பாத்தியப்பட்டுள்ளது என்பதும், உபய வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் தலா ஒரு பாக வீதம் பெற உரிமை உள்ளது என விளம்புகை செய்து முதல் நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டள்ளது சட்டப்படி ஏற்ககூடியது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் கூறுவது போல் தாவா சொத்துக்கள் முழுவதும் 2ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டுள்ளது என கூறும் வாதம் ஏற்கதக்கதல்ல என்றும், உபய வாதிகளுக்கு உரிமையுள்ள பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள முதல் நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் எவ்வித தலையீடும் அவசியம் இல்லை என பிரச்சனை எண்.1 மற்றும் 2–க்கு தீர்வு காணப்படுகிறது.

1. இறுதியாக இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.
2. விசாரணை நீதிமன்றம்/திருத்துறைப்பூண்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.57/2013–ல் கடந்த 28.03.2017–ம் தேதியில் வழங்கிய தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு வாய்மொழியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில்

தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.04.10 19:40:39 +0530

சார்பு நீதிபதி,
திருத்துறைப்பூண்டி.

நகல் – மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.04.10 19:40:43 +0530

சார்பு நீதிபதி,

திருத்துறைப்பூண்டி.